# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **சாதாரணக்கூட்டம் 26-09-2025 வெள்ளிக்கிழமை மாலை** 4.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) மார்த்தாண்டம் மேம்பாலத்தின் தூண்களில் போஸ்டர் ஒட்டுவதை தடுக்கவும் குழித்துறை நகரை அழகுப்படுத்தும் விதமாகவும் விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் வண்ணப்படங்கள் வரைவதற்கு தேசிய நெடுஞ்சாலை துறையிடம் அனுமதி பெற மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1468 தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை நகர பகுதியில் பெறப்படும் Pampers மற்றும் Napkins அறிவியல் முறைப்படி எரியூட்டுவதற்கு மார்த்தாண்டம் MCC அருகாமையில் Chimney அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

   மன்றத்தீர்மான எண்.1469 தீர்மானிக்கப்பட்டது.

3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.லூ. ஷாலின் சுஜாதா கொண்டு வரும் தீர்மானங்கள்

1) வார்டு எண் 3-ல் முருகலாஞ்சிவிளையில் சுமார் 50 வீடுகள் உள்ளது. அவர்கள் குடிநீர் வசதி இல்லாமல் மிகவும் அவதிபடுகிறார்கள். அப்போது நகராட்சியால் ஆழ்துளை கிணறு போடப்பட்டது. அது இப்போது ஆழ்துளை கிணறு போடப்பட்ட இடத்திலுள்ள மண்ணை மழைவெள்ளம் அடித்து சென்றது. இப்போது மக்கள் ஆழ்துளை கிணறை பயன்படுத்த அந்த சாலையை கான்கிரீட் சாலையாக சீரமைத்து தர உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

   மன்றத்தீர்மான எண்.1470 தீர்மானிக்கப்பட்டது.

2) மணிச்சன்விளையிலிருந்து படப்பறை செல்லும் சாலை மிகவும் பழுதடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அந்த சாலையை அலங்கார கற்கள் பதிக்க கேட்டுக் கொள்கிறேன்.

மன்றத்தீர்மான எண்.1471 தீர்மானிக்கப்பட்டது.

<u>12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.கி.செ. ஜீலியட் மெர்லின் ரூத் கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) தெங்கன்குழிவிளை முருகன் வீட்டின் அருகில் இருந்து எமிலி வீடு வரையிலும் Interlock சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1472 தீர்மானிக்கப்பட்டது.

2) தெங்கன்குழிவிளை சஜீ மெடிக்கல்ஸ் அவர்கள் வீட்டின் அருகில் இருந்து ராஜமணி, செல்வின் அவர்கள் வீடு வரை Interlock சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1473 தீர்மானிக்கப்பட்டது.

<u>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ. லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானங்கள்</u>

1) காமான்டுவிளையில் இருந்து கொல்லன்விளை வரை உள்ள ஓடையை சரி செய்து அதற்கு மூடிபோடவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1474 தீர்மானிக்கப்பட்டது.

2) 14-ம் வார்டில் கம்பத்தில் எல்லாம் வார்டு எண்.14 என்று போடாமல் எல்லா மின் கம்பத்திலும் வார்டு எண்.15 என்று எழுதி வைத்திருக்க அதை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1475 தீர்மானிக்கப்பட்டது.

3) 14-ம் வார்டில் ம.சி.க. தொடக்கப்பள்ளி முன்பு நிற்கும் மின்கம்பம் போக்குவரத்துக்கு இடையூறாக நிற்கின்றது. அந்த மின்கம்பம் அந்த பள்ளியின் முன் பக்கம் உள்ளது அதை எடுத்து மாற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1476 தீர்மானிக்கப்பட்டது.

4) மார்த்தாண்டம் கொல்லக்குளம் முதல் வாத்தியக்குடி வரை வடிகால் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1477 தீர்மானிக்கப்பட்டது.

<u>15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.பா. ரீகன் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) எனது வார்டு எண்.15-க்கு உட்பட்ட கொல்லகுளம் பகுதியை சார்ந்த திரு. பக்தசிங் வீடு முன் தொடங்கி குளம் வரம்பு வழியாக திரு. மனோஜ் வீட்டின் முன் முடிகின்ற சாலையும், குளத்தின் கரையானதும் பழுதடைந்து காணப்படுகின்றது. மேற்படி குளத்தின் இருபக்கங்களுக்கு கம்பியால் ஆன பாதுகாப்பு விளையமும் அமைத்துதர மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1478 தீர்மானிக்கப்பட்டது.

<u>17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.அ. அருள்ராஜ் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) வடக்குத்தெரு நேசமணி குட்டிபாலம் அருகில் இருந்து E.B. அலுவலகம் செல்லும் சாலையை காங்கிரீட் தளம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1479 தீர்மானிக்கப்பட்டது.

<u>20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.மை. சர்தார் ஷா கொண்டு வரும் தீர்மானம்</u>

1) மார்த்தாண்டம் பி.பி.கே. அருகிலும், மஞ்சு மருத்துவமனை அருகில் மேம்பாலத்திற்கு ஏறும் படிகளை, பாதையை ஆக்கிரமித்தும், குலசேகரம் ரோட்டில் துவங்குமிடத்தில் அஞ்சுவீடு நுழைவாயில் அருகிலும் உள்பட மார்த்தாண்டத்தின் பாதையோரங்கள் மற்றும் சாலைகளை கூட அடாவடியாக ஆக்கிரமித்து பாதசாரிகளை நடமாட முடியாத வகையில் தடை செய்து சாலைகளில் நடக்க வைப்பதால் தினசரி சிறு விபத்துகள் ஏற்படுவதும், மாணவர்கள் பாதசாரிகள் பாதிக்கப்படுவதும் அன்றாட நடவடிக்கையாக உள்ளது. எனவே மேற்படி ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1480 தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 1</u>

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் காந்தி மைதானத்தில் அமைந்துள்ள பயோ டாய்லெட் மக்கள் பயன்படுத்தும் விதமாக பயன்பாட்டிற்கு கொண்டுவர நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் நேரடி ஆய்வின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி பயோ கழிவறை தண்ணீர் வசதி மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7.50 இலட்சம் (ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.2596/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1481 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 2</u>

குழித்துறை நகராட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்து சுதந்திர தின சிறப்பு மலரில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பத்திரிக்கை பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | தினத்தந்தி | 9840 |
| 2 | மாலைதமிழகம் | 23100 |
| 3 | மாலைமலர் | 18900 |

மேற்படி வரப்பெற்ற தொகையினை சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பொது நிதியின்கீழ் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண்.1482 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி பொதுசுகாதாரம் தூய்மை இந்தியா திட்டம் மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் உருவாகும் கழிவுகள் போடுவதற்கு Stainess Steel Havey metal (twin Bin) 25 வாங்குவதற்கு 08-09-2025 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் பட்டியல் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு எண்ணம் twin Bin விலைப்புள்ளியின் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | SASTHATECH | 14900 |
| 2 | VTRSURVEILLANCE TECHNOLOGY | 13400 |
| 3 | NAKSHATHRA TECHNOLOGY | 14500 |

மேற்படி வரபெற்ற விலைப்புள்ளிளில் குறைந்த விலைப்புள்ளி வரிசை எண்-2-ல் கொண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2522/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1483 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சி குழித்துறை மின்வாரியம் மற்றும் களியக்காவிளை மின்வாரியத்துக்கு உட்பட்ட இடங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு குழித்துறை மின்வாரியத்திலிருந்து ரூ.1,54,249/- மற்றும் களியக்காவிளை மின்வாரியத்திடமிருந்து ரூ.79,204/-க்கான கேட்பு தொகை வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை குழித்துறை மற்றும் களியக்காவிளை மின்வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1851/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1484 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து பிரிக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் மார்த்தாண்டம் கீழ்பம்மம் பகுதியில் உள்ள வளமீட்பு மையத்தில் வைத்து Bailing செய்து செட்டிநாடு சிமெண்ட் ஆலைக்கு அனுப்பிட நாள் ஒன்றுக்கு 2 முதல் 2.5 டன் அளவிற்கு பிளாஸ்டிக் கழிவுகள் வரப்பெற்று Bailing செய்யப்பட்டு வருகிறது. மேற்படி Bailing செய்வதற்கு மாதம் ஒன்றுக்கு சுமார் 15 கட்டு Rope கயிறு தேவைப்படுவதால் ஒரு வருடத்திற்கு சுமார் 200 கட்டு கயிறு தேவைப்படுகிறது. எனவே 1 Rope கட்டு 350/- வீதம் 200 X 350 = 70,000/- செலவின செய்ய பொது நிதியிலிருந்து செலவின செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2986/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1485 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள புல்புதர்களை வெட்டுவதற்கு 2 மின் புல்வெட்டும் மிஷன் மூலம் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிக்கு புல்வெட்டும் இயந்திரத்திற்கு Rope கயிறு மற்றும் Rope head Cup தேவைப்படுகிறது. இதில் Rope head .அடிக்கடி உடைவதால் வருடத்திற்கு மொத்தமாக தேவைப்படுகிறது.

4 Rope கயிறு மாதம் ஒன்றுக்கு ரூ.475/-

ஒருவருடத்திற்கு 48 Rope கயிறு 48 x 475 = 22,800/-

1 Rope head மாதம் ஒன்றுக்கு ரூ.400/-

ஒருவருடத்திற்கு 20 head Rope Cup 20 x 400 = 8000/-

மேலும் ஆகமொத்தம் 30,800/-ம் உத்தேச செலவின தாகை ரூ.31,000/-யினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2986/2025/எச்1.

மன்றத்தீர்மான எண்.1486 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்..7</u>

குழித்துறை நகராட்சி அலுவலகத்தை சுற்றி அமைந்துள்ள 9 கேமராக்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தன. அலுவலக பாதுகாப்பினை கருத்தில் கொண்டும் கேமராக்களை பழுது நீக்கம் செய்திட SHINE TRADERS என்ற நிறுவனத்தின் மூலம் பழுதினை சரி செய்யப்பட்டது. இதற்கான செலவுத்தொகை ரூ.4730/-ஐ இந்நகராட்சி பணியாளர் திரு.கே. முருகன் அலுவலக உதவியாளரால் செலவு செய்யப்பட்டது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2804/2025/இ1.

மன்றத்தீர்மான எண்.1487 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 8</u>

தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2018-19 TURIP-ன் கீழ் குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.S.ஜீன்ஸ் மேற்கண்ட பணி மேற்கொண்டமைக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள வைப்புத்தொகை ரூ. 242415/- காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேடு பக்கம் எண்.7-ல் உள்ளது. எனவே மேற்படி தொகையினை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

மன்றத்தீர்மான எண்.1488 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10-ல் நெல்லிவிளை சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் அப்பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3571/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1489 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சி வார்டு எண் 10-ல் பனவிளை சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்களுக்கு சிரமமாக உள்ளதால், பொதுமக்களின் நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் அப்பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.40 இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.** 3572/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1490 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.11

குழித்துறை நகராட்சி வார்டு எண் 10-ல் விளவங்கோடு அரசு தொடக்கப்பள்ளியின் 180-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நுழைவாயிலில் புதிதாக ஆர்ச் அமைப்பதற்கு பள்ளி சார்பாகவும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகர்மன்ற தலைவர் கேட்டு கொண்டதன் படியும் விளவங்கோடு அரசு தொடக்கப்பள்ளியின் நுழைவாயிலில் ஆர்ச் அமைப்பதற்கு மதிப்பீடு தொகை ரூ.4,20,000/- (நான்கு இலட்சத்து இருபதாயிரம்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3573/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1491 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 19-ல் மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் அம்மா உணவகம் அருகில் பயணிகள் காத்திருக்கும் அறை அருகில் காலியான இடத்தில் நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் கடை அமைப்பதற்கு நகர்மன்ற உறுப்பினர் கேட்டு கொண்டதன் படியும் நகர்மன்ற தலைவர், ஆணையாளர், பொறியாளரின் அறிவுரைப்படியும் இடம் பார்வையிடப்பட்டு மதிப்பீடு தொகை ரூ.6,60,000/- (ஆறு இலட்சத்து அறுபதாயிரம்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 3574/2025/இ1
மன்றத்தீர்மான எண்.1492 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சி வெட்டுமணி மேம்பாலத்தின் புதிதாக மின்விளக்குகள் அமைத்திட ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1425, நாள்: 21-08-2025-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 18-09-2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 0.28% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.P. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2571/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1493 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சி வார்டு எண்.10-ல் குழித்துறை பழையபாலம் அருகில் புதிதாக மின்விளக்குகள் அமைத்திட ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1423, நாள்: 21-08-2025-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 18-09-2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | 0.11% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ள திரு.P. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2570/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1494 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.15</u>

குழித்துறை நகராட்சி வெட்டுமணி பகுதியில் மேம்பாலத்தில் கீழ் பகுதியில் புதிதாக மின்விளக்கு அமைத்திட ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1420, நாள்: 21-08-2025-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 18-09-2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | 0.34% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.11% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.11% குறைவாக கொடுத்துள்ள திரு.P. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**2574/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1495 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.16</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.1 முதல் 10 வரையிலான ( குழித்துறை மண்டலம்) பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களில் பழுதுநீக்கம் செய்ய ரூ.4.00 இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1381, நாள்: 26-06-2025-ன் படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 18-09-2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 0.21% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக கொடுத்துள்ள திரு.P. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1801/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1496 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.17

குழித்துறை நகராட்சி வார்டு எண்.11 முதல் 21 வரையிலான (மார்த்தாண்டம் மண்டலம்) பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களில் பழுது நீக்கம் செய்ய ரூ.4.00 இலட்சத்திற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1382, நாள்: 26-06-2025-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 18-09-2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயசந்திரன் | 0.21% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக கொடுத்துள்ள திரு.P. ஜெயபிரகாஷ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1800/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1497 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 18

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20-ல் மார்த்தாண்டம் நவீன தினசரி சந்தை KNMT 2023-24 திட்டத்தின்கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால் சந்தையின் உள்பகுதி சுற்றிலும் Paver Block சாலை அமைக்கப்பட உள்ளது. சந்தையின் வெளிபகுதியில் சாலையில் Paver Block அமைக்கப்பட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 21-06-2025 அன்று ADMA அவர்கள் தினசரி சந்தை ஆய்வு செய்யப்பட்டதில் Paver block சாலைக்கு பதிலாக BT அல்லது CC சாலை அமைக்க அறிவுறுத்தப்பட்டதால், சந்தையின் மேற்கு பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.19.80 இலட்சத்திற்கு (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை KNMT 2023-24 திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் நவீன தினசரி சந்தையின் மதிப்பீட்டு தொகையில் மேற்கொள்வதற்கும் பேவர் பிளாக் சாலைக்கு பதில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கும் மன்றத்தின் அனுதிக்கு

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3575/2025/இ1
மன்றத்தீர்மான எண்.1498 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.19

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20-ல் மார்த்தாண்டம் நவீன தினசரி சந்தை KNMT 2023-2024 திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால் சந்தையின் உள்பகுதி சுற்றிலும் சாலை அமைக்கப்பட உள்ளது. இச்சாலையில் Paver Block அமைக்கப்பட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 21-06-2025 அன்று ADMA அவர்கள் தினசரி சந்தையை ஆய்வு செய்யப்பட்டதில் Paver block சாலைக்கு பதிலாக BT அல்லது CC சாலை அமைக்க அறிவுறுத்தப்பட்டதால், சந்தையின் கிழக்கு பகுதியில் சிமெண்ட் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.19.40 இலட்சத்திற்கு (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து நாற்பதாயிரம்) தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3576/2025/இ1

மன்றத்தீர்மான எண்.1499 அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண். 20

குழித்துறை நகராட்சி பொதுசுகாதார மினிலாறி TN75AY3630-ல் பேட்டரியில் செல் கட்டாகி இயங்காத காரணத்தால் புதிய பேட்டரி பொருத்தினால் தான் வாகனம் இயக்க இயலும் என ஓட்டுநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கி பொருத்துவதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | M/S.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | ரூ.7427/- |
| 2 | M/S.மாதவா மோட்டார்ஸ், வெள்ளமடம் | ரூ.8260 |

மேற்படி இரண்டு நிறுவனங்களில் M/S.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ளது. எனவே மேற்படி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**113/2019/இ1

மன்றத்தீர்மான எண்.1500 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண். 21</u>

குழித்துறை நகராட்சியில் பொதுப்பிரிவில் பணிபுரியும் பணியாளர்களான மேலாளர், கணக்கர், உதவி திட்ட அமைப்பாளர், உதவியாளர், தட்டச்சர், இளநலை உதவியாளர்கள் (5 நபர்கள்) பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர்கள் (3 நபர்கள்) இருக்கை வசதிகள் போதுமானதாக இல்லாத காரணத்தாலும் மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வின் போது இவ்வலுவலகத்தில் எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், நெட்ஒர்க் கேபிள்கள் சரியாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே அதனை சரி செய்திடவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே முதல்கட்டமாக பொதுப்பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இருக்கைகள் Cubboard அமைத்து சரி செய்வதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9,90,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**1655/2025/இ1
மன்றத்தீர்மான எண்.1501 அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.22</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20-ல் புதிதாக கட்டப்பட்டு கொண்டிருக்கும் சந்தையின் வடக்கு பக்கம் பாதுகாப்பு கருதி சுற்றுசுவர் அமைப்பதற்கு நகர்மன்ற உறுப்பினர் கேட்டு கொண்டதன்படியும் நகர்மன்ற தலைவர் உத்தரவு படியும் இடம் பார்வையிடப்பட்டு ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரைபடியும் மதிப்பீடு தொகை ரூ.9,30,000/- ஒன்பது இலட்சத்து முப்பதாயிரம் மட்டும் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்.**3677/2025/இ1
மன்றத்தீர்மான எண்.1502 அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறைநகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி..